இருநாழி அரிசியும், கிழிந்த ஆடையும் கொடுத்து மகிழ்ச்சியாக முன் வந்து கை நீட்டினால் போதும்; அகத்தீசர் அருள்பெற்ற குறத்தியராகிய நாங்கள், நீங்கள் மனத்தில் நினைத்துள்ள யாவற்றையும் விடாது முறையாகச் சொல்லுவோம்.

## *Kuṟam*[1] – Gypsylore

(Gypsywomen (***Kurattis***) declare their proficiency in ***Kuṟi*** or sooth saying and predictions)

If you give us just two *nāḻis*[2] of rice
And torn clothes some,
And extend right hand thine willingly
We the gypsies blessed with the grace divine
Of Lord **Akattīcaṉ**
Will reveal thy thoughts and aspirations all
Now itself precisely for sure
And predict their outcome as well.

1. *Kuṟum* – In Tamil poetry *Kuṟum* or gypsylore forms a part. *Kuṟavars* and *Kuṟattis* are nomadic men and women with some special skills like soothsaying besides their traditional means of livelihood. The study of that gypsy tribe is known as *Kuṟum*.

2. *Nāḻis* – A volumetric measure.

### 69. இதுவு மது

(இதுவும் குறம் என்றும் உறுப்பு)

### அறுசீர் விருத்தம்

குறத்திய ரெம்மொழி கேளம்மே கூறுமகத் தீசன் மேலே
யுறத்திய னித்தாசை கொண்டா யுன்றனைநா ளைக்கே வந்து
திறத்திய லோடணை வார்மயலுந் தீருமோர் சேயுமு தித்திடுமா
னிறத்திய லார்குழ விப்பெயரு நிலமதில் வேளென்றிசையுறுமே.

அம்மே! குறத்தியாகிய என் மொழியைக் கேள்! அகத்தீசர் மேலே ஆசை கொண்டுள்ளாய். உன்னை நாளைக்கே வந்து அவ்வகத்தீசர் அணைவார். உன்றன் ஆசையும் தீரும். ஒரு குழந்தையும் பிறக்கும். அக்குழந்தை முருகன் என்ற பெயருடன் புகழ் பெற்று விளங்கும்.

**சேய், குழவி** – குழந்தை. **வேள்** – முருகன். **இசை** – புகழ்.

### *Kuṟam* – Gypsylore

Oh! *Ammē*[1],
Do listen to what we ***Kuṟattiyar***[2] tell thee,
Thon art enamoured of Lord **Akattīcar**
He will come to you tomorrow itself
And hug thee to appease desire thine,
A child will be born to thee as well,
Who will grow up and glow
As **Murukaṉ**[3] illustrious of glory great.

1. *Ammē* – a term of respect or endearment used to address women. It means Oh! Madam.
2. *Kuṟattiyar* – Gypsywomen
3. **Murukaṉ** – the younger son of Lord **Civaṉ** and an exclusive Tamil God noted for his bravery and handsomeness.

### 70. கலிவிருத்தம்

இசையுறு மகத்திய வீசற் குறுபணி
திசையுறு தலமெலாந் திகழச் செய்யுமோர்
நசையுறு மனத்தவர் நமனிட ரின்றியே
மிசையுறு மரன்பத மேவி வாழ்வரே.

புகழ்பெற்ற அகத்தீசர்க்கு எத்திசையிலும் உள்ள எல்லாத் தலங்களிலும் பணி செய்து வாழும் பக்தர் யமனால் வரும் துன்பமின்றிச் சிவன்பதம் பொருந்தி வாழ்வர்.

நசை – அன்பு. நமன் – எமன். மிசை – மேல்.

Those who render service in devotion deep
To the famed **Akattīcar**
At all his shrines in directions all,
Will never have torment any from **Yama<u>n</u>**
They will live for ever in peace
Under the aegis of **Ara<u>n</u>'s** feet.

### 71. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வாழுமேழ் புரவியான் மருவுதே ருடையவன்
வலியதோர் வெயிலினான் மதிமுகம் வேர்வையாற்
றாபமே ரன்னமே தாண்டுமிப் பாலைகா
தங்கடந் தாலுடன் சாருகா வதமரை
வீழுமேல் விண்ணளா வியவகத் தீசனார்
மேவுபொற் கோயிலு மேடையும் புரிசையுஞ்
சூழுமே கம்படி சோலையு மக்கினித்
தூயமா தீர்த்தநற் றுறையுமே தோன்றுமே.

ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரையுடைய சூரியனின் வெப்பத்தினால் சந்திரன் போன்ற முகம் வேர்த்த அன்னம் போன்ற பெண்ணே! இப்பாலை நிலங் கடந்து ஒன்றரை காத தூரம் நடந்தால் விண்ணளாவிய அகத்தீசர் உறையும் அழகிய கோயிலும், மேடையும், மதிலும், மேகம் சூழ்ந்த சோலையும், அக்கினித் தீர்த்தத்துறையும் தோன்றும்.

உடன் போக்கின் போது தலைவன் தலைவிடம் கூறியதாக இருக்கலாம்.

புரவி – குதிரை. புரிசை – மதில். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்பு ஒவ்வொரு க்ஷேத்திரத்ததுக்கும் உண்டு. அகத்தியான் பள்ளித் தலத்து அகத்தீஸ்வரர் கோயிலின் தீர்த்தப் பெயர் **அக்கினி தீர்த்தம்.**

(This song is perhaps the statement of the ***Talaivan*** **to the** ***Talaivi*** during her ***Uṭanpōkku*** (elopement) with the ***Talaivan*** across a ***Pālai*** (desert) land.

Oh! sweet damsel swanlike,
Thy moonlike face doth sweat in the scording heat
Of the sun who hath a chariot[1] drawn by horses seven,
If we but cross this desert
And walk a ***Kātam***[2]
The lovely temple of Lord **Akattīcar** towering up to the skil,
The ***Mēṭai***[3] therein and the ramparts around,
Besides the cloudcovered groves
And the ***Akkini Tīrttam***[4] as well
Will all be there for us to see.

1. **chariot** – According to Hindu mythology the sungod is supposed to traverse the skies in his Chariot drawn by seven horses.
2. ***Kātam*** – a distance of 10 miles or 16 kilometres.
3. ***Mēṭai*** – a raised structure or dais in a temple
4. ***Akkini Tīrttam*** – The name of the holy pond near **Akattīcar** temple.

In all Hindu temples the three important components are ***Mūrtti*** (the deity), ***talam*** (the shrine) and ***Tīrttam*** (temple tank).

### 72. பனிக்காலம்

(பனிக்காலம் வந்தும் தலைவன் வரவில்லையே எனத் தலைவி ஏங்குதல்)

#### கட்டளைக் கலித்துறை

மேவிக் கலச முனிபூசை செய்து விளங்கிடுமோர்
காவிற் கலந்த வகத்தீசர் வந்திடக் காண்கிலனே
பூவிற் புகுந்தொளி புட்களே நெஞ்சுகற் போலுமறை
தாவிப் பனிக்கா லமும்வர வின்னமென் றாமதமே.

பூவில் புகுந்து ஒளிந்து கொள்ளும் வண்டுகளே! அகத்தியரால் பூசை செய்யப்பட்டு விளங்கும் ஒரு சோலையில் என்னைச் சேர்ந்த அகத்தீசர், மான்கள் விளையாடும் இப்பனிக்காலம் வந்தும் இன்னும் வரக் காணேன். ஏன் தாமதம்? நெஞ்சம் கல்லோ?

**கலசமுனி** – கும்பமுனி அகத்தியர். புள் – வண்டு. மறை – மரை – மான்.

### *Pa<u>n</u>ikkālam* – the dewy season

The *Talaivi* (heroine) longs for the company of the *Talaiva<u>n</u>* (hero) as he has not shown up even after the advent of the dewy season)

Oh! beetles who hide yourselves in flowers
Lord **Akattīcar** who did mate with me
At a grove where saint **Akattiyar** offered worship
Has not yet been sighted
Even after the advent of the dewy season
Which makes the deer merry and playful
Why this delay? Is he so hard hearted ?

### 73. சவலை வெண்பா

மதனை யெரித்த மகிபனை வேளாஞ்
சுதனை யளித்த சுதனை
யகத்திப் பரனை யறியுந் தவரே
சகத்திற்சா வில்லா தவர்.

மன்மதனை எரித்தவனும், செவ்வேளாகிய முருகனை மகனாகப் பெற்றவனும் ஆகிய அகத்தீசுவரனை அறிந்த தவத்தையுடையரே இவ்வுலகில் சாவில்லாதவர்.

**சவலை வெண்பா** – வெண்பா இலக்கணம் பெற்று, இரண்டாம் அடி இறுதிச் சீர் குறைந்து வந்துள்ளதால் இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. **மதன்** – மன்மதன். **மகிபன்** – அரசன். **வேள்** – முருகன். **சுதன்** – மகன். **சகம்** – உலகம்.

## *Cavalai Veṇpā*[1]

Only those who in penance theirs comprehend **Akattīcan**
Who did burn **Manmatan** in his ire
And who hath *Vēḷ*[2] as his son
Are the immortals veritable who defy death
In this world of ours.

1. *Cavalai Veṇpā* – This quatrain is in *Veṇpā* metre but in the secondline of the original text in Tamil the *Cīr* or metrical foot falls short and hence becomes defective or weak. Therefore it is called *Cavalai Veṇpā* . *Cavalai* means anaemic or weak.

2. *Vēḷ* – *Vēḷ* or *Cevvēḷ* means a fair and handsome person. Here it refers to Lord **Murukan**.

## 74. பிச்சியார்

(தலைவனை நினைத்துப் பைத்தியங் கொண்ட ஒரு தலைமகளின் நிலையை விளக்குதல்)

### எழுசீராசிரியச் சந்த விருத்தம்

தவவுரு வங்கொளு மக்கம் விபூதி
தரித்துடை காவி யுறச்
சிவவுரு வங்கொ டகத்திய னூருள
தெருவறு பிச்சி யரே
நவவுரு வங்கொடு பிச்சை யெடுத்திட
நாடுநீர் பிச்சி யரோ
வவவுரு வங்கம தசைவற நோக்குறு
மாடவர் பிச்சி யரோ.

தவவேடமாகிய உருத்திராட்ச மாலை, திருநீறு ஆகியவற்றைத் தரித்து, காவியுடை உடுத்தி, சிவ உருவம் கொண்டு அகத்தியான் பள்ளியில் உள்ள தெருவில் வரும் பிச்சியாரே! புதிய உருவம் கொண்டு பிச்சை எடுத்திட வரும் நீர் பித்தரோ? ஆசை தரக்கூடிய உங்கள் அங்கத்தைக் கண் இமைக்காமல் நோக்கும் ஆடவர் பித்தரோ?

அக்கம் – உருத்திராட்சம். கொடு – கொண்டு. நவ – புதிய. அவவுரு – ஆசைதரக் கூடிய.

## *Picciyār* – (A crazy woman)

(Description of a ***Talaimakaḷ***[1] who has gone crazy with love towards her ***Talaiva<u>n</u>***[2])

Oh! ***Picciyār*** who dost sport
The saintly outfit of a string of beads[3],
With sacred ash[4] and saffron robe[5] besides
And walk in he streets of **Akattiyā<u>n</u>paḷḷi**
In he guise of Lord **Civa<u>n</u>**
Art thou insane to project thyself
As a strange beggar thus?
Or are those men insane
Who stare at the provocative sexy features thine ?

1. ***Talaimakaḷ*** – ***Talaivi*** or heroine
2. ***Talaiva<u>n</u>*** – The hero or lover.

3,4,5 – Cavite saints wear **Strings of beads, sacred ash** and **saffron robes** to identify themselves with Lord **Civa<u>n</u>** as his true devotees.

The term ***Picciyār*** in this song means a crazy or insane person

### 75. சித்து

(சித்தர்கள் ஒன்றை வேறொன்றாக மாற்றுவேன் எனக் கூறுதல்)

#### எண்சீ ராசிரிய விருத்தம்

பிச்சியரும் பித்தளைநா கங்காணச் செய்வோம்
பேசுமிரும் பைநாகம் பணமுமுறச் செய்வோம்
நச்சியுறு மீயத்தை வெள்ளிவரச் செய்வோம்
நாகத்தைப் பொன்னாக நாடுறவுஞ் செய்வோம்
இச்சித்த படியேயி ரசவாதஞ் செய்யு
மியலுறுமோர் பதினெட்டுச் சித்தர்களில் யானோர்
மெச்சுஞ்சீர் பெற்றதொரு சித்தன்யா னென்னூர்
விளங்குமகத் தீசர்வதி மேவுறுநற் பதியே.

பித்தளையை நாகமாகச் செய்வோம். இரும்பையும் துத்த நாகமாக்கிப் பணம் பெறுமாறு செய்வோம். ஈயத்தை வெள்ளியாக்குவோம். துத்தநாகத்தைப் பொன்னாக்குவோம். விரும்பியபடி இரசவாதம் செய்யும் 18 சித்தர்களில் நானும் ஒருவன் ; புகழ் பெற்றவன். என் ஊர் அகத்தீசர் வாழும் அகத்தியான் பள்ளி.

பிச்சியரும்புகளை ஜடை நாகத்தைச் சுற்றிப் பின்னுவோம். பெரிய நச்சுப் பையையுடைய நாகத்தைப் படம் எடுக்கச் செய்வோம் ; வானில் வெள்ளியை (சுக்கிரனை) வரச்செய்வோம். மலையைப் பொன்னாகச் செய்வோம் (மேருமலை) என்று இயல்பாக உள்ளதை அப்படியே கூறும் சாதாரணப் பொருளும் காண்க.

**இரும்பு** + **ஐ** = இரும்பை. **இரும்** + **பை** = பெரியபை. **நாகம்** – மலை, பாம்பு. **பணம்** – படம் ; காசு.

## *Cittu*[1] (The magic of the mystics)

(Declaration of the alchemy of ***Cittars***)

We the *Cittar*[2]
Will convert brass into zinc
And change iron too similarly as zinc
To make money thereby

Lead lowly we will transform into silver sparkling
We will make gold out of zinc for sure,
I am one of the ***Cittar* eighteen**[2]
Who perform alchemy such as we desire
Famous am I as a ***Cittar***
And I belong to **Akattiyāṉpaḷḷi**
Where **Akattīcar** doth reside.

1. *Cittu* – magical trics or miracles performed by Cittar.

2. *Cittar* – a mystic or unorthodox saint

3. ***Cittar** eighteen* – There were eighteen **Cittar** who were mystics. They not only performed magical feats or miracles but also evolved an efficient system of medicine known as **Siddha medicine**. They were experts on both temporal and spiritual matters.

**76. கட்டளைக் கலித்துறை**

பதிவி லமணர்க்கு நாசவா திக்கும் பவுத்தருக்கு
மதியில் வயிணவ மாந்தர்க்கும் யார்க்கு மதியுரைப்பேன்
நிதியுறு மாதி யுயிரெலாந் தந்த நிமலனருங்
கதிதரு வோனகத் தீசன வன்றாட் கருதுமினே.

நல்ல கொள்கையற்ற சமணர்க்கும், தீய வாதம் செய்பவர்க்கும், பவுத்தருக்கும் அறிவற்ற வைணவர்க்கும் அறிவுரை கூறுவேன்; கேளுங்கள்! செல்வம் பெற்ற உயிர்களைப் படைத்த குற்றமற்றவனும், மேலான செல்வமாகிய முத்தியைத் தருபவனும் ஆகிய அகத்தீசன் தாளை நினையுங்கள்.

பதிவு – கொள்கை. மதி – அறிவு. நிதி – செல்வம். கதி – மோட்சம்.

A piece of advice I do offer
To the *Camaṇar*[1] sans principles sound
And to the **nihilists**[2] who counsel evil
Besides the **Buddhists**[3] and **Vaiṣṇavites**[4] senseless

And others as well,
Do listen to me,
Contemplate in minds thine
The lord flawless who did create
The prosperous lives all here on earth
And who doth confer
The noble wealth of *Mukti*[5] eternal
Think of **Akattīcaṉ**, the Lord such.

*Camaṇar* – The followers of **Jainism**

**Nihilists** – Those who consider nothing as important or valid. They also advocate destruction of existing institutions and values.

**Buddists** – The followers of **Buddhism** and the teachings of **Lord Buddha.**

**Vaiṣṇavites** – The followers or worshippers of **Lord Viṣṇu and Vaiṣṇavism.**

***Mukti*** – State of eternal bliss after one's death.

**77. வலைச்சியார்**

(மீனவப் பெண்ணைப் பார்த்துக் காமுற்று உரைப்பது)

**பதினான்குசீர் ஆசிரியச் சந்த விருத்தம்**

மின்னற் போலிடை தான்றி ருக்கை
மீனைப் போலவு மேகயன்
மீனைப் போலவு மோடி டுஞ்சேன்
மீனைப் போலவு மேவிழி
சன்னற் போல்விரல் தான்கெ ளிற்றின்
சாயற் போலுற வேமுழந்
தாளைப் போலும் வராலு மாலா
தானு மலங்கு சுறாவுமுன்
பின்னற் போலெழி லேவு றச்சீர்
பெற்று மகத்திய மாநகர்

பேர்பெறு வீதியின் மீன்வி லைதான்
பேசிடு மோர்விலை மாதரே
யின்னற் செய்மத னம்பி னாலிங்
கென்னை மயற்கொள வைப்பதா
லென்ன பயன்பெறு வீர்த வீர்த்தே
யின்புற வேசெய் தேகுவீரே.

மின்னல் போன்ற இடை திருக்கை மீனைப் போலுள்ளது. விழி கயல் மீனைப் போலவும் சேல் மீனைப் போலவும் பிறழுகிறது. சன்னல் போன்ற விரல்கள் கெளுத்தி மீனைப்போல் உள்ளன. முழங்கால் வரால் மீன் போன்றும் ஆலா போன்றும் உள்ளது. மலங்கும், சுறாவும் உன் பின்னல் போல் எழில் பெற்று உலாவுகின்றன. இப்படிப்பட்ட அழகுடன், அகத்தி மாநகரின் பெயர் பெற்ற வீதிகளில், மீனை விலை பேசும் மாதரே! துன்பம் தரும் மன்மதன் அம்பினால் நான் மையல் கொண்டு தவிக்கிறேன். ஆதனால் உமக்கு என்ன பயன் விளையப் போகிறது. எனவே என் துன்பம் நீக்கி இன்புறச் செய்து செல்வீராக!.

### *Valaicciyar*

(Declaration of amorous desire for a lasses selling fish)

Oh! women who sell fish
In the famous streets of **Akattiyāṉpaḷḷi**
Your waists are like flashes of lightning
And ***tirukkai***[1] fishes as well
Eyes thine are like ***Kayal***[2] and ***Cēl***[3] both
Thy fingers resemble ***Caṉṉal***[4] and ***Keḻuthi***[5] alike
Your knees look like ***Varāl***[6] and ***Ālā***[7]
The plaited tresses thine move but elegantly
Like ***Mālaṅku***[8] and ***cuṟā***[9]
Oh! lovely lasses such who sell fish at **Akattinakar,**
I do suffer from pangs of love
Caused by **Maṉmataṉ's** flowery shafts

What do you gain by causing me
Amorous misery such?
Please relieve me of agony mine
And make me happy before you leave.

1 to 9. *Tirukkai, Kayal, cēl, Caṉṉal, Keḻuthi, Varāl, Ālā, Mālaṅku* and *cuṟā* are all the names of various kinds of edible fishes

### 78. நேரிசை வெண்பா

வியன்மா வகத்தி விமலனைப் பூவா
முயன்மா தவனறி யானை – யியன்மா
மறைமுடிவோ னைப்பணியு மாதவத்தோர்க் கில்லை
யிறைமுடிவோ னாற்செ யிடர்.

இடமகன்ற சிறப்புப் பொருந்திய அகத்திமாநகர் வாழும் குற்றமற்றவரும், தாமரைப்பூவில் வாழும் பிரமனாலும், திருமாலாலும் அறியப்படாதவரும் வேத முடிவாய் விளங்குபவருமாகிய அகத்தீசரை வணங்குபவருக்கு எமனால் வரும் துன்பமில்லை.

**வியன்** – அகன்ற, சிறந்த. **விமலன்** – குற்றமற்றவன். **இறை முடிவோன்** – எமன்.

For those who worship
The Lord flawlers who doth reside
At **Akattinakar** glorious of understreets,
And whom the lotusborne **Piramaṉ** [1] and **Mātavaṉ** [2]
Could not trace and comprehend,
And who is the substance ultimate of scriptures all,
Those who worship **Akattīcar** such,
Will have no torment from the terminal **god of death** [3]

1. **Piramaṉ** – The god of creation in Hinduism.
2. Mātavaṉ – **Tirumāl** or Lord **Viṣṇu** the god of protection.
3. **god of death** – **Yamaṉ**.

### 79. கட்டளைக் கலித்துறை

இடரே யகத்தி யிறையி னருள்பெற் றிருக்குமெனைச்
சடரே செயநினை வாயதுன் மூடத் தனமலவோ
படரே லெனையிப் பொழுதுசொன் னேன்கேள் படரிலென்சொற்
சுடரே யுனது தருக்கழி வுற்றிடச் சுட்டிடுமே.

துன்பமே! அகத்தீசர் அருள்பெற்ற என்னைத் துன்புறுத்த நினைக்கிறாய். அது உன் அறியாமை. என்மீது படராதே! படர்ந்தால் என் சொல் உன் செருக்கு அழிய உன்னைச் சுடும்.

சடர் செய்தல் – துன்புறுத்துதல்.

Oh! misery,
Thou don't plan to torment me
The recipient of **Akattīcar**'s grace divine,
It is but thy ignorance
I tell thee now not to cling to me,
If thou creep over me even then
Just a word from me
Will scorch thee and arrogance thine.

### 80. இரங்கல்
### கலிவிருத்தம்

(ஒரு பெண் அகத்தீசர் மேல் காதலுற்று இரங்கிப் பாடுவதுபோல் பாடப்பட்ட பாடல்)

சுட்டிடுங் காமனார் தொட்டிழுத் தேசரம்
விட்டிடும் புண்களின் மேலையே சந்தனங்
கொட்டிடுங் கோதையீர் கோவகத் தீசருக்
கெட்டிடும் வண்ணமென் னின்னலைச் சொல்வீரே.

மன்மதன் இழுத்து விடும் அம்பினால் ஏற்பட்ட புண்களின் மேல் சந்தனம் பூசும் பெண்களே! தலைவராகிய அகத்தீசர் காதில் கேட்கும் வண்ணம் என் துன்பத்தைச் சொல்வீராக.

காமன் – மன்மதன். சரம் – அம்பு. கோ – தலைவன். **இன்னல்** – துன்பம்.

### *Irankal* (Pity)

(Expression of selfpity by a woman enamoured of **Akttīcar)**

Oh! lasses who pour sandal paste on my wounds
Caused by the heady shafts from the bowstring
Pulled by the hot **Ma<u>n</u>mata<u>n</u>** who hunts me
Do tell Lord **Akattīcar** in terms loud and clear
My agony of love acute
So that it reaches his ears.

### 81. கொற்றியார்

(வைணவ பக்தியுடன் வீதியில் வரும் பெண் மீது காமுற்ற ஒருவன் பாடுவது)

**எண்சீர் ஆசிரிய விருத்தம்**

சொல்லிசை யுறுந்தமிழ் தொழப்பெறு மகத்தீ
சுரர்மருவு மூர்மறுகு தோறுமொரு நாம
நல்லிசை விளங்கிடமு னான்குமுடன் மேவ
நாடுமரி நாமமவை நாவதுரை செய்ய
வல்லிசை பெறுந்துளவ மாலையணி வுற்று
மகிழ்கொற்றி யாரென வருந்தெரிய லேவு
னெல்லிசை யுறுந்திருவி லிருடியர் தவங்க
ளிழப்பரெனி லென்மய லிசைக்குமள வுளதோ ?

சொற்சிறப்புடைய தமிழால் தொழப்பெறும் அகத்தீசர் வாழும் ஊரில் தெருத்தோறும் பெயரும் புகழும் விளங்கிட அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் பொருந்த, நாராயணா என்னும் பெயரை உச்சரித்துக் கொண்டு துளசி மாலையணிந்து கொண்டு வரும் கொற்றியாரே! உங்களுடைய அழகில் முனிவரே மயங்கித் தம் தவத்தை இழப்பர் எனின் என் காமம் சொல்ல முடியுமோ?

**மருவும்** – பொருந்திய. **மறுகு** – தெரு. **நாமம்** – பெயர். **இசை** – புகழ். **துளவமாலை** – துளசி மாலை. **முன்னான்கு** – அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு. **இருடி** – ரிஷி, முனிவர். **தெரியல்** – மாலை. **மயல்** – மயக்கம், காமம். **இசைக்கும்** – சொல்லும்.

## *Korriyār* (FeMāle devotees of Lord Vi ṣṇu)

(Sung by a man enamoured of a *Korriyār*)

Oh! *Korriyār* ,
Who dost walk the streets of the shrine of **Akatticar**
Worshipped by **Tamil** with its wealth of words proper,
And who endowed with the essential traits four womanly[1]
Dost wear ***Tuḷaci***[2] garland and chant the name of **Ari**[3] as well,
On seeing your beauty so ravishing
Even saints most devont will deviate from penance theirs
And lose its benefits thereof
If saints become so enamoured
Can I express adequately my lustful desire for thee?

1. The four essential traits for women are ***Accam*** (fear), ***Maṭam*** (innocence), ***nāṇam*** (shyness) and ***Payirpu***.
2. ***Tuḷaci*** – **basil** – a plant used in worship of **Viṣṇu**
3. **Ari** – An appellation of Lord **Vi ṣṇu.**

### 82. நேரிசை வெண்பா

உளமாரப் பொய்யே யுரையார்மற் றோர்பெற்
றுளமாதைத் தாயாயெண் ணுற்றோ – ருளமா
ரகத்தீசர் தாள்போற்று மன்பருமே யிந்தச்
சகத்தே யுயருத் தமர்.

அகத்தீசர் தாள் போற்றும் அன்பர், மனம் பொருந்திப் பொய் சொல்லாதவர், மற்ற பெண்களைத் தாயாக மதிப்பவர், ஆகியோர் இப்பூமியில் உயர்ந்தவர் ஆவர்.

சகம் – உலகம். அகத்தீசரை வணங்குபவர் மற்ற இருவருக்கும் சமமாகக் கருதப்படுபடுவர் என்பது கருத்து.

Those who do not utter lies of their own volition,
The folk who consider
All other women as mothers theirs,
And the ardent devotees
Who hail **Akattīcar's** feet divine
Are all the exalted people on earth indeed.

This song also implies that the devotees of **Akattīcar** are on a par with people who do no utter lies and those who treat all womenfolk reverentially as their mothers.

### 83. மடக்குத் தாழிசை

### எண்சீர் விருத்தம்

தமரகந் தரித்துளார தமரகந் தறித்துளார்
தாரகர்த்த ராயுளாரு தாரகர்த்த ராயுளார்
யமரகங் கடிந்துளாரி யமரகங் கடிந்துளார்
யாமியன் பதிக்குளாரி யாமியம்பு பற்றுளார்
சமரகந்த னெந்தையார்றி சமரகங்கொள் சிந்தையார்
தார்கடுக்கை யாரொர்நீல தார்கடுக்கை யாலெடுத்
தமரகண்ட மாக்கினாரி தமரகண்ட மாக்கினார்
அருளகத்தி நாதனாரெ மருளகத்தி நாதரே.

அருளையுடைய அகத்தீசர், எம் மயக்கம் நீக்குபவர்; தன்னிடம் அன்பு பூண்டவர் அகத்தில் வீற்றிருப்பவர்; தீயவர்களின் ஆணவத்தை அடக்குபவர்; உமையை இடப்பாகத்தில் கொண்டுள்ளவர்; கருணைச் செயல் புரிகிறவர்; மார்க்கண்டனுக்காக எமனைக் கடிந்தவர்; இயம யோகிகளுக்கு உள்ளம் உருகி அருளுபவர். நான் வாழும் ஊருக்கு உரியவர்; நான் பாடும் அன்புக்குடையவர்; சமராபுரி கந்தனின் தந்தை; நியம யோகிகள் உள்ளத்தில் இருப்பவர்; கொன்றை மாலை அணிந்தவர்; நீல நிறமுள்ள ஆலகால

விடத்தைக் கையால் எடுத்து விரும்பி உண்டதால் கண்டம் (கழுத்து) நீலமானவர் ; அவ்வாறு உண்டதால் (அமுதம் கிடைத்துத் தேவர்கள் உண்ண அவர்களுக்கு) தேவர் உலகம் நிலைக்கச் செய்தவர்.

தமர் + அகம். அகம் – உள்ளம். அதமர் + அகம் = தீயவர் ஆணவம். தறித்தல் – வெட்டுதல், நீக்குதல். தாரகர்த்தர், உதாரகர்த்தர். உதாரம் – உதவி. கருணை. இயமர் – இயமம் உடையவர். இயமம் – அட்டாங்க யோகத்துள் ஒன்று. பதி – ஊர். நிசமர் – நியமம் உடையவர். நியமம் – அட்டாங்க யோகத்து ஒன்று. கடுக்கை – கொன்றை. தார் – மாலை. கடு + கையால் + எடுத்து + அமர + கண்டம் – தேவர்களின் உலகம்.

## *Maṭakku*

(Repetition of words to give different meanings)

**Akattīcar** of grace divine
Is the lord who doth dispel illusions ours,
A resident in the minds of his devotees ardent
He doth sever the conceit of evil folk all
Holder of consort **Umai**[1] on his left
He is a benefactor benign as well,
He did chide **Yama<u>n</u>**[2] once for **Mārkkaṇṭa<u>n</u>'s**[3] sake
He doth melt in his grace for the ***Iyama yōkis***[4]
He not only doth belong to my place
But also is the Lord of my loving prayers,
Father he is to **Kanta<u>n</u>**[5] of **Camarāpuri**[6]
He doth dwell in he minds of *Nicamars*[7] too,
The Lord doth wear ***Ko<u>n</u>rai*** garland
His neck turned blue as he did consume
The bluish *Ālakālam*[8] of his own accord
To vouch for **Tēvars**[9] *Amarakaṇṭam*[10] heavenly
As their proper place rightful.

In the original Tamil song words and phrases are repeated to give different meanings to describe the different attributes of the Lord.

1. **Umai** – the consort of Lord **Civan.**
2. **Yaman** – God of death
3. **Mārkkantan** – A young devotee of **Civan** who was saved from death by he Lord who punished **Yaman** for his attempt to snatch the life of **Mārkkantan.**
4. ***Iyama Yōkis*** – Practitioners of **Iyama Yōkam**. **Yōkam** means a rigorous and disciplined control of body and mind through physical exercises and meditation. It involoves perfect concentration of body and mind.
5. **Kantan** – Lord **Murukan** the son of Lord **Civan**
6. **Camarāpuri** – One of the resorts of **Murukan**.
7. ***Nicamar*** – A category of **Yōkis**.
8. **Ālakālam** – The name of the poison consumed by **Civan** when he saved the **Tēvars** from the poison's deadly fumes.
9. **Tēvars** – The heavenly beings.
10. *Amarakantam* – The city or State of **Tēvar**.

### 84. நேரிசை வெண்பா

நாதா வகத்தி நகரா மறைதுதிக்கும்
பாதா வெவர்க்கும் படியளிக்குந் – தாதா
மிடியா லலையா விதம்யா னுறவு
னடியா தரவே யருள்.

நாதா[1] அகத்திநகர்த் தலைவா! வேதம் போற்றும் பாதங்களையுடையவனே! எல்லோர்க்கும் உணவளிக்கும் வள்ளலே! வறுமையால் நான் பிறரிடம் அலையாத வண்ணம் உன்னுடைய பாதங்களின் ஆதரவை எனக்கு அருள்வாயாக.

மறை – வேதம். படி – உணவு. தாதா – வள்ளல். மிடி – வறுமை.

Oh! **Nātā**[1]
Oh! Leader of **Akattinakar**
Oh! Lord whose feet is worshipped by scriptures,

Oh! Generons feeder of folk all,
Do please grant me the succour of feet thine,
To save me from wandering here and there
In poverty miserable and abject.

1. **Nātā** – Oh! Lord.

### 85. கட்டளைக் கலித்துறை

அருளே நிறையு மகத்தீசற் கென்மீ தருளிலையோ
விருளே நிறையு மிடிதா னெனைவிட் டிரியலையோ
பொருளே நிறையும் படிபுண் ணியம்யான் புரியலையோ
மருளே நிறையும் வினைக ளெனையேன் வருத்துவதே.

இருள் நிறைந்த வறுமை என்னைவிட்டு நீங்கவில்லை. மயக்கம் தரும் வினைகள் என்னை வருத்துகின்றனவே! பொருள் நிறையும்படி நான் புண்ணியம் செய்யவில்லையோ? அருள் நிறைந்த அகத்தீசர்க்கு என்மேல் அருள் இல்லையோ? (அகத்தீசரே! நீர் அருள் செய்து என் துன்பம், தீவினையை அகற்ற வேண்டும் என்பது கருத்து.)

**இரிதல்** – நீங்குதல்.

Has the gracious **Akattīcar** no mercy on me ?
The dark penury doth never leave me,
Have I not done anything virtuous
To deserve prosperous plenty?
Why doth ***Vinai***[1] illusory harass me for ever?

1. *Vinai* – In this context *Vinai* means bonds and obligations of this world.

### 86. எண்சீர் ஆசிரியச் சந்த விருத்தம்

வருத்துமிடி நோய்தீர் மருந்துநிதி யதனை
மகிழ்ந்துற வளித்துநல் வயித்திய மியற்று
மருத்துவ னகத்திய மகாமுனி யவன்காண்
மகதேவ னைத்துதி வழுத்திமன மேற

விருத்துமல கீர்மிடி யிருந்தவிட மறியா
தேகிடநி திக்குவிய லேறிட வளிக்குந்
திருத்துணை விளக்கந் திகழ்ந்ததிக வின்பஞ்
சேரவரு நினைவுகள் செயம்பெற விளங்கும்.

வறுமை நோய் தீர செல்வமாகிய மருந்து கொடுத்து வைத்தியம் பார்க்கும் மருத்துவன் அகத்தீசன். உலகத்தவரே! மகாதேவனாகிய அவனைத் துதித்து மனத்திலிருத்துங்கள். வறுமை இருந்த இடம் அறியாமல் செல்லும்படி செல்வம் கிடைக்கும்; மகிழ்ச்சி கிடைக்கும்; வெற்றி கிடைக்கும்.

செயம் – வெற்றி.

**Akattican** is a physician ventable
To cure the Mālady of poverty with the medicine of wealth,
Oh! worldly folk,
Do worship and hold him in minds thine,
Then wealth so huge will accumulate
That thy penury will vanish without a trace,
Happiness too thou will attain,
And your aspirations all will meet with success.

### 87. இரங்கல்

### குயில் விடு தூது

### கலிவிருத்தம்

விளங்குறு மகத்தியன் வியன்பதி விரிஞ்சன்
வளங்குல வறும்பத மலர்க்கடிமை யென்ற
னுளங்கவலை கொள்மய லுரைத்தவ ரிடந்தா
திளங்குயில டைந்துவரு மியல்புரிக நின்றே.

இளங்குயிலே! அகத்தியன் பள்ளித் தலைவராகிய அகத்தீசன் பாதங்களுக்கு நான் அடிமையென்றும் என் உள்ளம் அவனை நினைத்து மையலால் கவலையுறுகின்றதென்றும் கூறி எனக்கு நன்மை செய்வாயாக.

Oh, Young Cuckoo
Do please tell the Lord of **Akattiyāṉpaḷḷi**
That I am a slave at his feet divine,
And my mind doth suffer from pangs
Of anxious love acute for the Lord
Do me good by the favour such

### 88. கட்டளைக் கலித்துறை

நன்றே புரிபவர் நாடு மகத்திய நாதனைமுன்
சென்றே தொழுது மதுரஞ் செறிந்திடுந் தீந்தமிழ்ப்பா
நின்றே பலபுனைந் தானந்தக் கூத்தி னிலைபெறுவோர்க்
கன்றே பிறவிப் பெருங்கட னீந்திட லாகுவதே.

நன்மை செய்பவர் மட்டுமே நாடும் அகத்தீசர் முன் சென்று தொழுது இனிமை பொருந்திய தமிழ்ப் பாடல்கள் பல பாடி ஆனந்தக் கூத்தில் நிலை பெறுபவர்க்கு அன்றே பிறவிப் பெருங்கடலைக் கடக்க இயலும்.

நாடும் – விரும்பும். மதுரம் – இனிமை. புனைந்து – இயற்றி.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்." (திருக்குறள் 10)

என்னும் குறட்பா ஆசிரியரால் எடுத்தாளப்பட்டுள்ளது.

Those who stand before **Akattican**
The Lord sought by those who do good,
And hail Him in worship humble
With **Tamil**[1] hymns many and melodious
And dance as well in ecstary earnest,
Only such folk can swim and cross
The Ocean of birth so vast.

1. **Tamil** – A **Dravidian** language spoken in **Tamil Nātu** of South India. It is an ancient and classical language with a rich literature and well codified grammar.

### 89. விருத்தக் கலித்துறை

ஆலமர் செல்வன் விழிநுத லோன மகத்தீசன்
சூலம தேந்துஞ் சுகனுமை கொழுநன் சுரர்நாதன்
மாலய னாடும் அரனெண் டோளன் மழுவாளன்
ஞாலம தாளுஞ் சசிதர னெனின்வினை சாராதே.

"ஆலமர நிழலில் அமர்ந்தவனே! நெற்றிக்கண் பெற்றவனே! அழகிய அகத்தீசனே! சூலம் ஏந்துபவனே! உமை கணவனே! தேவர் தலைவனே! திருமாலாலும் பிரமனாலும் தேடப்பட்டவனே! எட்டு தோள்களையுடையவனே! மழுவேந்தியவனே! உலகத்தை ஆளுபவனே! சந்திரனை அணிந்தவனே!" என்று அகத்தீசரை வணங்கினால் வினை அடையாது.

If we hail **Akattican** as,
Oh! God seated under a banyan tree,
Oh! Lord with an eye on Thy forehead[1],
Oh! God who dost carry a ***Cūlam***[2],
Oh! consort of **Umai**[3]
Oh! Tevars' Chief,
Oh! God sought by **Māl**[4] and **Piramaṉ**[5]
Oh! Lord with shoulders eight,
Oh! God who dost carry ***Māḻu***[6]
Oh! Ruler of the world
Oh! wearer of the moon on thy locks,
If the Lord is hailed thus,
***Viṉai***[7] will not affect a supplicant such.

1. Lord **Civaṉ** is supposed to have a third eye on his forehead. It will emit fire when it is opened.
2. *Cūlam* – A trident or spear.
3. **Umai** – consort of Lord **Civaṉ**
4. **Māl** – **Tirumāl** or Lord **Viṣṇu** the god of protection.

5. **Piraman**– The God of creation.

6. ***Mālu*** – an axe which **Civan** carries in his hand.

7. ***Vinai*** – The impact one's deeds.

## 90. நேரிசை வெண்பா

### திரிபங்கி

(ஒரு செய்யுளிலேயே மூன்று செய்யுள் அமையுமாறு பாடும் சித்திரகவி)

சார்பாளா சங்கந்தா வாரந்தா தக்ககலை
தார்தாவு னங்கந்தா சாரமுறு – மார்தாநற்
சங்கரா வாரா தராவா ளகத்தீசா
தங்கரா வாரா தரா.

சார்புடையவனே! நல்ல கூட்டம் தா. இசையைத் தா. கலையைத் தா. உன் மாலையைத் தா. உன் மார்பைத் தா. சங்கரா! அகத்தீசா! ஆதரவு தா.

சங்கம் – கூட்டம். வாரம் – இசை. தார் – மாலை.

**இதனுள்ளேயே அமைந்த இரு வெண்பாக்கள்**

**இரண்டாவது சீரில் தொடங்குதல்**

சங்கந்தா வாரந்தா தக்ககலை தார்தாவுன்
னங்கந்தா சாரமுறு மார்தாநற் – சங்கரா
வாரா தராவா ளகத்தீசா தங்கரா
வாரா தராசார்பா ளா.

**மூன்றாவது சீரில் தொடங்குதல்**

வாரந்தா தக்ககலை தார்தாவுன் னங்கந்தா
சாரமுறு மார்தாநற் சங்கரா – வாரா
தராவா ளகத்தீசா தங்கரா வாரா
தராசார்பா ளாசங்கந் தா.

## *Tiripaṅki*[1] (A threefold song)

Oh! Lord dependable,
Grant me good company,
Give me music melodious
Do please provide me with arts as well
Give me the garland Thine,
Bestow me Thy benign chest besides
Oh! **Caṅkara**, Oh! **Akattīcā**
Extend thy support to me for ever.

*Tiripaṅki* – This term in the original **Tamil** text means that in this song the words and lines can be transposed and rearranged to have two more quatrains of the same **Veṇpā** metre. Thus there will be three songs or **Veṇpās** but the meaning of all will be the same.

Caṅkara – An appellation of Lord **Civa<u>n</u>**.

## 91. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தரைசே ருயிர்க டமக்கருளுந் தயைகொள் பரனா மகத்தீசன்
பரையா மனையா ளின்னருளாற் படிமீ துயர்ந்து வாழ்குவிரே
விரைசேர் கமல மலர்குழுமி விளங்கோர் காத மணநாறுந்
திரைமோ திடுமக் கினித்துறைக்கட் டிருநீர் படியு மொருநீரே.

மணம் பொருந்திய தாமரை மலர் கூட்டமாக விளங்கி ஒரு காதம் மணக்கும் அலை வீசும் அக்கினித் தீர்த்தத்தில் நீராடி மகிழ்பவரே! நீர் இவ்வுலகிலுள்ள உயிர்களுக்கருளும் அருள் பொருந்திய அகத்தீசரின் மனைவியாகிய உமை அருளால் இவ்வுலகில் நன்கு வாழ்வீர். (அக்கினி தீர்த்தத்தில் முழுகினால் நன்கு வாழலாம் என்பது கருத்து.)

**பரை** – உமை. **படி** – உலகம். **விரை** – மணம். **குழுமி** – கூட்டமாய். **காதம்** – ஏழரை நாழிகையில் (மூன்று மணி நேரம்) கடக்கும் தூரம். சுமார் 5200 மீட்டர். **மணம் நாறும்** – மணம்

வீசும். **திரை** – அலை. **அக்கினித்துறை** – அக்கினி தீர்த்தத் துறை. (அகத்தீசுரர் கோயிலுக்கருகே உள்ளது).

Oh! pious devotees
Who bathe blissfully at *Akkiniṯīrttam*[1] surfy and sacred,
With its bunches of lotus wafting their fragrance
Upto a ***Kātam***[2] away
You will lead lives exalted here in this world of ours
By the grace of **Umai** the consort divine
Of **Akattīcar** who showers his mercy
On all lives here on earth.

1. *Akkiniṯīrttam* – The name of the holy pond near the temple of **Akattīcar**.
2. ***Kātam*** – A distance of 5200 metres.

**92. வஞ்சி விருத்தம்**

நீர கந்துயி லேயனும்
பார கந்தரு தீரனுஞ்
சீர கம்பெறு தேவனு
மேர கத்தியி னீசனே.

அழகிய அகத்தியான் பள்ளி இறைவன் ஒருவனே நீரிலே (பாற்கடலில்) துயிலும் திருமாலும், உலகைப் படைத்த பிரமனும், சிறந்த உள்ளம் படைத்த தேவனும் ஆவான்.

**நேயன்** – அன்புடையவன் ; இங்கு திருமால். ***தீரன்*** – திறமையுடையவன் ; இங்கு பிரமன். **ஏர்** – அழகு.

The Lord of **Akatti** is the God sole and supreme,
It is He the kind God[1] who doth sleep in the sea,
And also the God[2] who hath created earth
It is **Akattīcar** indeed with a heart benevolent.

1. **God who doth sleep in the sea** – **Tirumāl** or **Viṣṇu** who is supposed to slumber on a snakebed in ***Pārkaṭal*** or Ocean of Milk.

2. **God who hath created earth** – **Piramaṉ** the god of creation In this song it is implied that **Viṣṇu** and **Piramaṉ** play their roles only under the aegis of **Akattīcar** or **Civaṉ.**

### 93. கொச்சகக் கலிப்பா

ஈச னகத்திநக ரெம்பிரா னேறூர்ந்தான்
வாச முறுஞ்சடில மன்னு மிளமதியே
வீசு கிரணத்தால் வெப்பளிக்கு மித்திறனை
நீசகத் துட்கற்ற நெறியே துரையாயே.

ஈசனும், அகத்திநகர் ஆள்பவனும், காளை வாகனத்தில் ஏறியவனும் ஆகிய சிவனின் மணம் பொருந்திய சடையில் உள்ள பிறைச் சந்திரனே! உன் கிரணத்தால் வெப்பமளிக்கும் திறமையை நீ இவ்வுலகில் கற்றது எப்படி? உரைப்பாயாக! (அகத்தீசன் மேல் ஏற்பட்ட காதலால் சந்திரன் வெப்பம் தருகின்றான் என்பது கருத்து. தலைவி கூற்று.)

**ஏறு** – காளை. **சடிலம்** – சடை. **மன்னும்** – நிலைபெற்ற. **சகம்** – உலகம்.

Oh! crescent moon
Who stays in the fragrant locks matted of Lord **Civaṉ**
Who astride his bull mount is the ruler of **Akatti** as well
Tell me how you did learn in this world
The trick [1] of making thy rays so hot and oppressive.

1. **The trick** – This song is a complaint of the lovelorn ***Talaivi*** (hereoine) who finds the moon's rays hot and oppressive due to the absence of the ***Talaivaṉ*** who is Lord **Akattīcaṉ** in this context.

### 94. கலி விருத்தம்

உரைகொள்சீ ரகத்தியி னுறையு மையனே
தரைபுகழ் பேறதே தரினு மன்றிநீ

நரைதிரை மூப்புடைப் பிறவி நல்கினும்
விரைமல ரடிவிடேன் விரவு மத்தனே.

புகழ்பெற்ற, சிறப்பையுடைய அகத்தியான் பள்ளியில் வாழும் உமை கணவனே! தலைவனே! இவ்வுலகம் புகழும் வீடுபேற்றைத் தந்தாலும், நரை, சுருக்கம், மூப்புடைய பயனற்ற பிறவி கொடுத்தாலும், உன் மணம் பொருந்திய மலர் போன்ற பாதத்தை விடமாட்டேன்.

உரை – புகழ். பேறு – வீடுபேறு, முக்தி. விரை – மணம். திரை – சுருக்கம்.

Oh! consort Divne of **Umai**
Who dost reside at **Akatti** glorious
Oh! Lord
Whether thou grant me a glorious status
Admirable on earth here,
Or ordain a miserable lot useless
Marked by wrinkles and grey hairs of wizened old age
I shall never leave Thy flowery feet fragrant.

### 95. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அயனார் சிரமொ ன்றினைச்சினந்திட் டந்நாட் கொய்த தாருகிரே
முயலு மொன்னார் புரமூன்று முன்ன ரெரித்த தின்னகையே
யியல்கொள் மதனை யெரித்ததுவு மெம்மா னகத்தி யிறைவிழியே
பயனே யன்றிச் சூலமொடு பரசு கொள்ளல் வீணன்றே.

சினந்து அந்நாளில் பிரமன் தலையைக் கொய்தவை அகத்தீசரின் நகங்களே; பகைவர் புர மூன்றை எரித்தது அகத்தீசரின் சிரிப்பே; மன்மதனை எரித்தது அகத்தீசரின் விழியே. அப்படியிருக்க சூலம், மழு ஏந்தியது வீணேயாகும்.

அயனார் – பிரமன். கொய்தது – கிள்ளியது. உகிர் – நகம். ஒன்னார் – பகைவர். நகை – சிரிப்பு. பரசு – மழு.

It was **Akattīcar's** nails sharp
That plucked **Piraman's** head[1]

It was his fiery laughter
Which set ablaze the three forts[2]
If foes formidable,
It was his eye which burnt **Ma<u>n</u>mata<u>n</u>**[3] to ashes,
Endowed with prowess such
The Lord doth carry in vain
Weapons like ***Cūlam***[4] and ***Maḻu***[5] in his hand

1. **Pirama<u>n</u>'s** head - **Civa<u>n</u>** plucked one of the five heads of **Pirama<u>n</u>** as he was very conceited at the time of **Civa<u>n</u>**'s marriage.

2. **Three forts** - **Civa<u>n</u>** is supposd to have burnt three forts of demons by means of this fiery langhter.

3. **Ma<u>n</u>mata<u>n</u>** - The God of love was punished for disturbing **Civa<u>n</u>**'s penance.

4,5. ***Cūlam*** and ***Maḻu*** - **Civa<u>n</u>** sports a spear and an axe in his hand.

**96. தூது**

**தரவு கொச்சகக் கலிப்பா**

அன்றுமுத லிதுகாறு மனம்விடுத்தா ளெனவனமே
சென்றுரையாய் சுகம்விடுத்தா ளெனச்செப்பாய் செஞ்சுகமே
யென்றுமுள குருகிழந்தா ளெனவியம்பா யிளங்குருகே
வொன்றினரைக் கருப்பாதியா வுயரகத்திப் பதியாற்கே.

தன்னை அடைந்தவரைப் பிறவா வண்ணம் காக்கும் அகத்தீசரிடம் சென்று, அன்னமே! அன்று முதல் இன்றுவரை அன்னம் (சோறு) உண்ணாள் எனக் கூறு. சுகமே! சுகம் விடுத்தாளெனச்சொல். குருகே! குரு கிழந்தாளெனச் சொல்.

அனம் – அன்னம், சோறு. சுகம் – நலம், கிளி. குருகு – நாரை, அழகு.

## *Tūtu*

(Sending a message)

***Talaivi*** (heroine) sends a message to ***Talaivan*** (hero) who is Lord **Akattīcan** here)

Oh! ***Annam***[1]
Go to the lord of **Akatti**
Who doth ever save his devotees dependent
From the cycle of birth,
And tell him that she has foregone ***Annam***[2] till date
Ever since he left her.
Oh! ***Cukam***[3]
Tell the Lord that she has given up ***Cukam***[4]
Oh! ***Kuruku***[5]
Inform **Akattīcar** of the loss of her ***Kuruku***[6]

1. ***Annam*** – Swan.
2. ***Annam*** – food
3. ***Cukam*** – parrot
4. ***Cukam*** – pleasure or wellbeing
5. ***Kuruku*** – stork
6. ***Kuruku*** – beauty

The words ***annam, Cukam*** and ***Kuruku*** are used in the original song twice to indicate the two meanings of each word.

### 97. நேரிசை வெண்பா

பதியே பிறைச்சடிலப் பண்ணவனே போற்றக்
கதியே யளித்தருளுங் கண்ணே – நிதியே
வஞ்சக் கரன்பிரம னாயு மகத்திநக
ஞ்சக் கரனே யருள்.
*Let

சந்திரன் தான் அடைந்த சாபத்தால் தேயும் நிலையில் அடைக்கலமென்று அடைந்ததனால் சடையிலே வைத்துத் தேயாமல் காப்பாற்றிய சிவனே! சிவாய நம என்னும் ஐந்தெழுத்துக்குச் சொந்தக்காரனே; சக்கரத்தை யுடையவனும், பிரமனும் தேடிய அகத்தீசனே; அருள்வாயாக.

பதி – தலைவன். **கதி** – வாழ்வு. நிதி – செல்வம். **வன்மை + சக்கரன்** – வலிமையான சக்கரத்தை யுடையவன் ; திருமால். **அஞ்சு + அக்கரன்** – ஐந்தெழுத்தையுடையவன் சிவன்.

Oh! Lord who did save the cursed moon[1] from warning further
By sheltering the crescent on Thy locks matted,
Oh! Lord of the five lettered incantation[2] sacred
Oh! **Akattīcan**
Whom **Tirumāl** sporting a wheel strong
And **Piraman** could not trace,
Do please sustain me in Thy grace divine.

1. **The cursed moon** - The moongod or ***Cantiran*** was cursed to ware completely for a sinful act but **Civan** redeemed him by accommodating the crescent moon on his locks. The moon was thus made to wax and wane alternately.
2. **Five lettered incantation** - ***na ma ci vā ya*** is that incantation

### 98. கலிநிலைத் துறை

அரிய நின்மனைக் கிழத்தியுந் தொலைவிலா வறமே
புரியு மேல்வையிற் செங்கரந் தனிற்பசும் புண்ணீர்
சொரியு மோர்தலை யோட்டினைக் கொடுமனை தோறுந்
திரியு மீதொரு வியப்பரோ வகத்தியான் சிவனே.

அகத்தியான் பள்ளி ஈசனே! நின் மனைவியாகிய உமை இடைவிடாமல் முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் அன்ன பூரணியாக விளங்கும் நிலையில், நீ புண் நீர் ஒழுகும் ஓட்டையான ஒரு மண்டையோட்டை உன் கையில் வைத்துக் கொண்டு வீடுதோறும் பிச்சை யெடுப்பது வியப்பாக உள்ளது.

**ஏல்வை** – வேளை. **புண்ணீர்** – குருதி. **கொடு** – கொண்டு. **மனை** – வீடு. சிவன், பிரமனின் ஐந்தாவது தலையைக் கொய்ததால் பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டு மண்டை ஓடு கையோடு ஒட்டியது. அது என்று நிறைகிறதோ அன்றுதான் கை விட்டுப் போகும் என்ற சாப வீடு பெற்றதால் வீடு தோறும் பிச்சையேற்றார் சிவன். இறுதியில் இலக்குமி கையால் அன்னமிட ஓடு நிறைந்து கையைவிட்டு அகன்றது.

Oh! Lord of **Akattiyāṉpaḷḷi**
While thy consort **Umai**
Doth engage herself in generous charity ceaseless
It is rather strange
That thou go about begging door to door,
With a leaky skull[1] as a bowl in Thy hand.

1.**leaky skull** – As **Civaṉ** plucked one of the five heads of **Piramaṉ**, **Civaṉ** was afflicted with the sin of **Piramahatti.** In order to absolve himself of the sin and get rid of the skull which stuck to his hand the Lord had to go about begging till the leaky bowl was filled. Atlast Goddess **Lakṣmi** filled the bowl with food and the skull fell from the Lord's hand.

### 99. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிலையிருக்குந் திருத்தோளும் விழியிருக்குந் திருநுதலுஞ் செவ்வே சூடுங்
கலையிருக்குந் திருமுடியுங் கனலிருக்குந் திருக்கரமுங் கலந்தோர் மங்கை
நிலையிருக்குந் திருப்பரிசு நீறிருக்குந் திருவடிவு நெஞ்சி னோர்ந்து
கலையிருக்கு மகத்திநக ரெழுந்தருளுங் கற்பகத்தைக் காணு வோமே.

வில் இருக்கும் தோளையும், விழி இருக்கும் நெற்றியையும், பிறையிருக்கும் சடையையும், தீயிருக்கும் கரத்தையும், மங்கையிருக்கும் பக்கத்தையும், திருநீறு அணிந்திருக்கும் திருவடிவையும் நெஞ்சில் நினைத்து அழகிய அகத்தி நகர் இறைவனைக் காணுவோம்.

**சிலை** – வில். **நுதல்** – நெற்றி. **கலை** – சந்திரன், அழகு. **பரிசு** – தன்மை.

*Let as contemplate in minds ours,

The elgant shoulder which sports a bow,
The forehead which an eye doth contain,
The matted locks that accommodate the crescent moon,
The hand which carries fire hot,
That part of his person which holds, the Damsel Divine
And the handsome figure entire smeared with sacred ash,
When we see all these in our minds' eyes
We see Lord **Akattīcan̲** for sure.

* In this song the physical features, attributes and accessories of Lord **Civan̲** are found in detail. Lord **Akattīcan̲** who is the manifestation of Civan at **Akattiyān̲paḷḷi** is also visualized thus.

**100. நேரிசையாசிரியப்பா**

கார்க்கடல் சூழ்ந்த காசினி புகழும்
வியன்பனை யுடுத்த மென்பரல் வைப்பில்
வலம்புரி யீன்ற வாளொளி நித்திலம்
வெண்ணில வெறித்தலின் விளங்கிடுந் தடநீர்
பாற்கட லாகம் படுதிரைச் சுரட்டே
பாம்பணை யாகப் பாசடைக் குழாங்கள்
பச்சை மேனியின் பாங்கினைத் தெரிக்க
அலர்செய் கமல மளவில் கருணைசேர்
விழிமுதற் பலவா மேவுறுப் பாகப்
பூவுல கனைத்தும் புரந்திடு புண்ணியன்
பள்ளி கொண்ட பரிசது காட்டு
மந்தண் பூந்தட மளவில் சூழ்ந்திட்
டருஞ்சீர் பெருகு மகத்தியான் பள்ளித்
திருநக ரதனிற் றிகழ்ந்திடு பெருமான்
சுருதியு மறியாச் சுந்தர புருடன்
விரிமலர்ச் செஞ்சடை வேதியக் கூத்தன்

திங்களங் கண்ணித் தேவ தேவ
னுலகமோ ரேழும் பலமுறை பயந்து
மிளமுலை முதிரா விறைவியால் வைகு
மாமுத றடிந்த காமரு குழவியின்
மழலைத் தீஞ்சொலின் மகிழ்ந்திடுஞ் செவியினன்
செஞ்செவிக் கைப்பயான் தெறித்தபுன் மொழிக்கு
மறித்தே யருள்கூர்ந் தாண்டுகொண் டனனால்
தேனெனப் பாலெனத் தித்திக் குந்தமிழ்
மாண்புயர் கவிகள் வழுத்துநற் பாவலீர்!
செந்நெறி யாடவும் சிந்தைமேற் கொண்டு
பாத்தொடுத் தாளும் பரமனை
நாத்தழும் பூறநீ ரேத்துமின் சீரே.

கருமையான கடல் சூழ்ந்த உலகம் புகழும் பனைமரங்கள் நிறைந்த மணற் பரப்பில், வலம்புரிச் சங்கு ஈன்ற ஒளிபொருந்திய முத்து வெண்ணிலவு போல் ஒளி வீசுவதனால் குளத்து நீர் பாற்கடல் போல் விளங்குகின்றது. அலைகள் பாம்பணை போல் காட்சியளிக்கின்றன. பாசடைகள் திருமாலின் பச்சை மேனிபோல் தோன்றுகின்றன. தாமரை மலர்கள் அவனுடைய கருணை பொழியும் விழியாகவும் முகமாகவும், கையாகவும், காலாகவும் விளங்குகின்றன. அதனால் பூவுலகைக் காக்கும் திருமால் பள்ளி கொண்டது போல குளங்கள் காட்சியளிக்கின்றன. அத்தகைய அழகிய பல குளங்கள் சூழ்ந்த அகத்தியான் பள்ளியில் கோயில் கொண்டுள்ள அகத்தீசன் வேதங்களாலும் அறிய முடியாத அழகிய ஆண்மகன் ; விரிந்த சிவந்த சடையையுடைய வேதியன் ; கூத்தன் ; குளிர்ந்த கண்களையுடைய தேவன் ; உலகம் முழுவதும் ஏழுமுறை பெற்றும் முதிரா இளமுலையுடைய உமையால், சூரனாகிய மாயையை அழித்த முருகனாகிய குழந்தையின் மழலை கேட்கும் செவியையுடையவன். அவன் செவி கசக்குமாறு நான் பாடும் பாடலையும் ஏற்று அருள் புரிந்தான். எனவே தேன் போன்றும், பால் போன்றும் தித்திக்கும் தமிழில் பாடும் புலவர்களே! அவனை நா தடிக்கும்படிப் பாடுவீராக.

**கார்** – கரிய. **காசினி** – உலகம். **பரல்** – மணல். **வாள்** – வெண்மையான. **நித்திலம்** – முத்து. **எறித்தல்** – ஒளிவீசல், காய்தல். **தடம்** – குளம். **திரை** – அலை. **பாசடை** – பாசி. **புரந்திடும்** – காக்கும். **புண்ணியன்** – இங்கு திருமால். **பரிசு** – தன்மை. **சுருதி** – வேதம். **சுந்தரபுருடன்** – அழகிய ஆடவன். **பயந்து** – ஈன்று. **மா** – சூரனாகிய மாமரம். **தடிந்த** – அழித்த.

காமரு – விருப்பம் பொருந்திய. குழவி – குழந்தை. இங்கு முருகன். பாவலீர் – புலவர்களே!. தழும்பு – வடு.

In the vast sandy expanse surrounded by the sea dark
And dotted with palmtrees famed worldwide.

As the pearl yielded by the rightwhorled conch[1]
Doth emit its luster like the moon so white.
The sheet of water in the tank shines like ***Pāṟkaṭal***[2]
The waves there have woven the snakebed[3] vertable
The layers of green weeds remind us of **Māls** green hue divine
The lotus flowers seem to represent
**Māl's** eyes merciful and many other limbs besides
Thus all the ponds present the scene picturesque
Of **Tirumāl's** solemn slumber divine
At **Akatti** girdled with such tanks glorious
Lord **Akttīcaṉ** hath his holy shrine,
He is a prince charming whom the scriptures cannot comprehend,
A dancer[4] He is with matted red locks blossomed wide
A **Tevar** of **Tevars** all
With cool lunar eyes lovely,
The Lord who doth listen joyously with his ears
The lisp of His child **Murukaṉ**
Who did destroy the evil ***Cūraṉ***[5] illusory,
And whose mother is **Umai** whosebreasts remain unsagged
Despite her begetting the worlds seven,
The great and glorious Lord such
Did condescend in his grace divine
To listen to my songs bitter and jarring
Hence, Oh! poets and bards

Who can compose and sing in Tamil chaste
Songs sweet and delicious like milk and honey
Do sing and hail His glory great
Till thy tongues become sore and numb

1. **nightwhorled conch** - conchs do not yield pearls Only oysters generate pearls. Hence this is an example of poetic license.
2. ***Pārkaṭal*** - The legendary ocean of milk
3. **snakebed** - The legendary serpentine couch of **Tirumāl** in the ocean of milk or ***Pārkaṭal.***
4. **Dancer** - Lord **Civaṉ** as **Naṭarāja** is a Divine Dancer at **Tillai** or **Citambaram**.
5. **Cūraṉ** - an evil demon by name **Cūrapatmaṉ** he appeared in various shapes and tormented the **Tevars. Murukaṉ** fought with that demon who assumed the shape of a mangotree and destroyed him.

## துணைநூற்பட்டியல்

**பதிப்புக்குரிய சுவடி**

அகத்தீசர் கலம்பகம், ஆர். எண் 7611. — அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை,

**அச்சு நூல்கள்**

1. அபிதான சிந்தாமணி, — ஆ.சிங்காரவேலு முதலியார், ஆசியன் எஜுகேஷனல் சர்வீஸ், டெல்லி, 1991.

2. அஷ்டப்பிரபந்தம் தெளிவுரையுடன், — மு. சண்முகம்பிள்ளை (பதி.), முல்லை நிலையம், சென்னை, 1995.

3. இம்மானுவேல் கலம்பகம், — சுந்தர முதலியார் (பதி.), சென்னை, 1863.

4. இலக்கண விளக்கம், பொருளதிகாரம், பாட்டியல், — தி.வே. கோபலையர் (பதி.), சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை, 1974.

5. கயிலைக் கலம்பகம், — குமரகுருபரத் தம்பிரான், கழக வெளியீடு, சென்னை, 1923.

6. கலித்துறைப் பாட்டியல் என்னும் நவநீதப் பாட்டியல், — எஸ். கல்யாணசுந்தரம் ஐயர், எஸ். ஜி. கணபதி ஐயர் (பதி.), உ.வே.சா. நூலகம், சென்னை, 1994.

7. காசிக் கலம்பகம், — குமரகுருபரத் தம்பிரான், கழக வெளியீடு, சென்னை, 1925.

8. சிதம்பரப் பாட்டியல், — மு.இராகவையங்கார் (பதி.), மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1911.

| | | |
|---|---|---|
| 9. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், | சிவப்பிரகாச சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் மெமோரியல் அச்சுக் கூடம், | 1887. |
| 10. சுவாமி நாதம், | செ.வை. சண்முகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், | 1975. |
| 11. ஞான விநோதன் கலம்பகம், | சண்முகசுந்தர முதலியார் (பதி.), கல்விக்களஞ்சிய அச்சுக் கூடம், சென்னை, | 1869. |
| 12. தமிழ் இலக்கியக் கொள்கை – 8, | ச.வே. சுப்பிரமணியன், கு. பகவதி (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, | 1983. |
| 13. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், | ச.வே. சுப்பிரமணியன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, | 1984. |
| 14. தமிழ்ப் பேரகராதி ஒன்று முதல் ஆறு தொகுதிகள், | சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, | 1982. |
| 15. தமிழில் கலம்பக இலக்கியம், | எஸ். செளந்தர பாண்டியன், ஸ்டார் பிரசுரம், சென்னை, | 1988. |
| 16. திருக்கலம்பகம், | மூ. பரிமணன் (பதி.), ஆசியவியல் நிறுவனம், செம்மஞ்சேரி, | 1999. |
| 17. திருக்காவலூர்க் கலம்பகம், | வீரமாமுனிவர், தத்துவ போதினி அச்சுக் கூடம், சென்னை, | 1872. |
| 18. திருக்கோட்டாற்றுக் கலம்பகம், | கொட்டாம்பட்டி எம். கருப்பையா புலவர், . . . . . . . . . . . . . . | 1898. |

19. திருச்செந்திற் கலம்பகம், சுவமிநாத தேசிகர், சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர், தமிழ்ச் சங்கமுத்திரா சாலை, மதுரை, 1905.

20. திருக்கண்ணபுரக் கலம்பகம், த. ஸ்ரீ. ராஜகோபாலன், புக்ஸ் (இந்தியா) பி.லிட், சென்னை 5, 1966.

21. திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம், பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு, காசிமடம், திருப்பனந்தாள், 1996.

